குறிப்பு எண். கே.3/27160/2008

கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும்
நிலநிர்வாக ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.

நாள்: 13.03.2018

**சுற்றறிக்கை**

பொருள்: W.P.No.9215 of 2013 - பட்டா மாறுதல் தகராறுகள் - சிவில் நீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் நிலுவை உள்ள நேர்வில் வருவாய் துறை அலுவலர்களால் உத்திரவிடப்படுதல் - அறிவுரை வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1. சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்திரவு W.P.No.9215 of 2013 - நாள் 23.10.2017

-------

பார்வையில் கண்ட உத்திரவு நகல் ஒன்றினை நிலநிர்வாக ஆணையருக்கு நகலிட்டு சென்னை உயர்நீதிமன்றம் பட்டா பாஸ்புக் சட்டம் 1983 அதன் கீழான விதிகள் ஆகியவைகளை கருத்தில்கொண்டு மாறுபட்ட முடிவுகளையும் மாறுபட்ட நிலஉரிமைகளை தோற்றுவிக்கும் செயல்களை தவிர்க்கும்பொருட்டு அனைத்து தாசில்தார்கள் மற்றும் மேல்முறையீட்டு மன்றங்கள் ஆகியவைகளுக்கு அறிவுரை தொகுப்பு ஒன்றினை வழங்கும்மாறும் உத்திரவிட்டிருந்தது.

2. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்திரவினை பார்வையிடுகையில் பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சிவில் நீதிமன்றத்தில் நிலம் தகராறு தொடர்பான வழக்கு நிலுவையிருந்த நிலையில் வழக்கின் ஒருசாராருக்கு பட்டா வழங்கியுள்ளார். இதனால் பாதிக்கப்பட்ட நபர் மேற்படி ரிட் வழக்கினை தொடுத்திருந்த நிலையில் நிலநிருவாக ஆணையருக்கு உயர்நீதிமன்றம் உத்திரவினை வழங்கியுள்ளது.

3. மேற்காண் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்திரவுகளை நிறைவேற்றும் பொருட்டு கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

அ) பட்டாவில் உண்மையான உரிமையாளர் பெயரை குறிப்பிட்டு சரியான முறையில் பட்டா பராமரிக்கப்படவேண்டும்.

ஆ) தீர்க்கப்படாத தகராறுகள் ஏற்பட்டிருக்கும்போதெல்லாம் சிவில் நீதிமன்றம் மட்டுமே நிலஉரிமையை நிலைநாட்டும் தகுதி வாய்ந்த மன்றம் ஆகும் என்பதை வருவாய் அலுவலர்கள் மனதில் கொள்ளவேண்டும்.

இ) மேல்முறையீடோ அல்லது சீராய்வு மனுக்களோ வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடமோ அல்லது மாவட்ட வருவாய் அலுவலரிடமோ தாக்கல் செய்திருக்கும் தருணத்தில் சிவில் நீதிமன்றத்தில் நிலஉரிமை தொடர்பான வழக்குகள் ஏதும் நிலுவையில்லை என்பதை உறுதிபடுத்திக்கொள்ளவேண்டும்.

ஈ) ஈடுபாடுடைய நபர்களோ அல்லது எதிர்வாதம் செய்யும் நபர்களோ சிவில் நீதிமன்ற நிலுவை வழக்குகளைப்பற்றி குறிப்பிட்டு வழக்கின் சான்றளிக்கப்பட்ட பிராது நகலை தாக்கல் செய்திருக்கும்போது அலுவலர்கள் எவ்வித உத்திரவுகள் பிறப்பிக்கக்கூடாது. அதற்கு பதிலாக தொடர்புடைய

Scanned by CamScanner

Scanned by CamScanner

நபர்களை நிலுவை இருந்துவரும் சிவில் வழக்கிலேயே பரிகாரம் தேடிகொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தவேண்டும். அதன்பின்பு சிவில் நீதிமன்ற டிகிரி மற்றும் தீர்ப்புரையுடன் வருவாய் துறை அலுவலர்களை பட்டா மாறுதலுக்கு தொடர்புகொள்ள அறிவுறுத்தவேண்டும்.

உ) வருவாய் கோட்ட அலுவலர்களும், மாவட்ட வருவாய் அலுவலர்களும் Revenue Standing Order -ஐ குறிப்பிட்டு உத்திரவுகள் பிறப்பிக்கப்படவேண்டும்.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் இந்த சுற்றறிக்கையினை அனைத்து சார் நிலை அலுவலர்களும் பெற்றுக்கொண்டதை உறுதிபடுத்திக்கொள்ளவேண்டும். மாவட்ட ஆட்சியாளர்கள் அனைவரும் இச்சுற்றறிக்கையினை பெற்றுக்கொண்டமைக்கு உடனே ஒப்புதல் அளிக்கவேண்டும்.

Sd/- V.K.Jeyakodi
Additional Chief Secretary/
Commissioner of Land Administration.

To

All District Collectors (By R.P.A.D./Email)
All District Revenue Officers (By Email)
All Revenue Divisional Officers (By Email)

//Forwarded by Order //

Superintendent

ஒப்பம்/-

Scanned by CamScanner

**Ref.No.K3/27160/2008**

O/o The Additional Chief Secretary/
Commissioner of Land Administration,
Ezhilagam, Chepauk,
Chennai-600005.

Dated:13.03.2018.

**CIRCULAR**

Sub: W.P.No.9215 of 2013 - Patta Transfer disputes - Orders passed by the Revenue authorities during the pendency of civil suits in the Civil Courts - Instructions - Reg.

Ref: 1. Hon'ble High Court of Madras order dated 23.10.2017 in W.P.No.9215 of 2013

-----

The Hon'ble High Court of Madras in their order dated 23.10.2017 in W.P.No.9215 of 2013, have marked a copy to the Commissioner of Land Administration and instructed to take note of the Patta Pass Book Act, 1983 and the Rules made thereunder and issue consolidated instructions to all the Tahsildars/Appellate Authorities to avoid all such conflicting decisions and creation of conflicting interest between the parties in this regard.

2. It is seen from the order of the Hon'ble High Court that when a civil suit was pending between the parties over a disputed land, the Revenue Divisional Officer, Ponneri, has passed orders transferring patta in favour of one of the parties. When the aggrieved party has approached the Hon'ble High Court of Madras in W.P.No.9215 of 2013, the Hon'ble High Court of Madras has given the directions to the Commissioner of Land Administration.

3. In compliance with the orders of the Hon'ble High Court above cited, the following instructions are issued:

a. Patta should show the names of persons who are the real owners of the land and should be maintained accurately.

b. Whenever, unsolved disputes arise between the parties, the revenue authorities should bear in mind that only civil courts are competent to decide the title.

c. If any appeal or revision is filed before the Revenue Divisional Officer or District Revenue Officer respectively, the authority concerned should ensure that there is no civil suit pending over the disputed land.

d. If any interested/contesting party has brought to the notice of the concerned authority about the pending suits over the disputed land with the objection supported by a declaration that a civil suit has been filed and is accompanied by an authenticated copy of the plaint, the concerned authority should not pass any orders. Instead, the parties concerned should be directed to seek remedy in the pending suits and approach the revenue authorities on the basis of decree and judgment of the civil court.

Scanned by CamScanner

e. The Revenue Divisional Officer and District Revenue Officer should scrupulously ensure to mention in their orders under which Revenue Standing Order, the appeal or revision is disposed of

The District Collectors are requested to ensure that the copy of this circular is duly acknowledged by all the subordinate officers without fail. The District Collectors are requested to acknowledge the receipt of this circular immediately.

Sd/- V.K. Jeyakodi
Additional Chief Secretary/
Commissioner of Land Administration.

To

All District Collectors (By R.P.A.D/Email)
All District Revenue Officers (By Email)
All Revenue Divisional Officers (By Email)

//Forwarded by order//

Superintendent

Scanned by CamScanner